ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 6 ஜுலை, 1943 நெ. 4

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம்.எல்.எ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வெய்யன்னு, பி.எ., பி.எல்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.

---


[illegible] யங்கம்.—

பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்தார்களுக்கும் ... 19

சென்னை நீர்பாசன வசதி சட்டம் ... 20

மைசூரில் கிராம புனருத்தாரண வேலை ... 21

கோவாபரேடிவ் ஸ்டோர்களைப்பற்றி ஸ்ரீ சத்தியநாதன், I.C.S. 22

2. கால் நடைகளுக்கு கொம்பெடுத்து விடுவது ... 24

3. 5-6-1943 திருவல்லிக்கேணியில் ஸ்ரீ சத்தியநாதன் அவர்கள், ஐ.சி.எஸ்., செய்த பிரசங்கத்திலிருந்து சில பகுதிகள் ... 25

4. செய்திகளும், குறிப்புகளும் ... ... 27


---





**கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.**

---

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

**அம்ருதாஞ்சனத்தை**

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. VII JULY. 1943 [No. 4


*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

---

## Madras Irrigation Works Legislation.

Under stress of emergency the Government have understood the great need there is to conserve and extend irrigation works in this province in an effective manner. About one fifth of our province is under Zamindari tenure. It covers an area nearly of a crore and 30 lakhs of acres. The Government hold that in many estates irrigation works are in a bad state of repair. Consequently a considerable extent of land is either left waste or fails to yield the maximum return. As it is of utmost importance to increase the production of food crops in the present emergency, the Government have decided that they should afford and enlarge facilities for growing such crops in the possible areas. Therefore, they propose to take steps ; by legislation, to bring under their own control the repair, maintenance, and development of irrigation sources in the Zamindari areas. They do not stop with that. They desire to get their control over all privately owned sources of irrigation. The Bill authorises the Government to repair and improve any existing private irrigation works and to construct new works on private lands. The Legislation contemplated, however, is not a measure for the period of the present emergency. It is a permanent measure. It is good that it is so ; because, after all, it is the duty of the Government to do all they can to improve the food position for the people and keep it well equal to the needs of a growing population. Times without number the Government themselves had to face serious criticism that they could not take measures to keep irrigation sources fully fit and extend them to meet the needs of the poor cultivator of this country. We are glad that this war, with all its ugly horrors and untold hardships, has at least had this good result of awakening the Government in India to the need of extending, improving, and

keeping in efficient repair, irrigation facilities. This piece of legislation now contemplated makes also provision for the Government to supply water from their own sources and charge fees for such supply. There is one point, however, in the whole legislation that requires some amount of reconsideration by the Government. The landholder who will be liable to pay the cost of the measures taken for improvements and fresh construction will have a right to apply under Clause ii of Sec. 30 of the Estates Land Act, for an enhancement of the rents payable by the ryots benefitted. It should not be open to the landholder to make profits out of this very much needed reform. Under this act, the ryot cannot refuse the facility created by the Government. So, the Zamindar will be in a position to collect an enhancement without reference to the advantage the ryot gets. The rate at which such an enhancement may be claimed is also not defined. It is likely that very difficult circumstance will arise for the ryot on account of these short-comings. It is well that the ryots concerned are consulted before the improvement or construction is taken up. It is possible that the Government has this consultation in mind and intends to achieve it through rules of procedure which it has power to pass ; but this is so important, from the ryot's view point, that an assurance to this effect may well be incorporated in the act itself. About the second point of the liability of the ryot to pay enhanced rent the position as to the extent of the levy must be made crystal clear. In truth, the landholder must have created these facilities long ago in virtue of the trust reposed in him by the ruling power. He has owefully néglected his trust. He deserves really no return when that trust is being enforced by that ruling power. Yet, as it is likely to be urged that he may not be deprived of a minimum return on his investment, the return he gets should, in no case, exceed the return that the ruling power gets on its schemes of a similar nature. The Cuddappah-Kurnool canal, for instance, yields but 12 annas per cent per annum. Why a similar work should pay the landholder more one cannot see. It is as much the duty of the landholder to create facilities for irrigation as of the ruling power, for the good of the ryot ; not for the return that will accure on the investment. It is therefore necessary that the Government do fix attention on this aspect before final shape is given to the enactment.

---

## Rural Reconstruction in Mysore.

During modern times Mysore has forged ahead with village improvement much better than the neighbouring British area. As early as 1890 Mysore passed a village sanitation act. Its Panchayat Act came into existence in 1926, six years later than the Madras

Panchayats Act. But there in Mysore, Panchayats were compulsorily constituted. To-day, there is not one village without the Panchayat rule. Further, Mysore utilised the labour power of the villagers to the fullest extent to improve the villages. The Somavarada Kelasa or contribution of labour by every householder on Mondays, to fill up pits, to cut down unwanted shrub growth, to make village roads connecting with main roads, and the encouragement given to tree planting in a number of ways, have so well helped the advance of villages in the Mysore state, that the very approach to a Mysore village pleases you and a tidiness has come over the village which is seen nowhere in the adjacent areas. Supply of electric current to rural areas has beautified villages in Mysore much further. The Mysore Government was not satisfied with what it had done. What had so far been done was under official control and necessarily as much result as was expected was not achieved. A five year plan was formulated in 1936. For five years no more than 264 villages could be worked. Therefore, the Government of the State have undertaken a new five year plan. They do not now only on official agency. Non-official agency workers are being depend trained. Only parts of each taluk will be put in charge of such workers each year. Thus in five years the full area would be covered. These non-official workers will be expected to co-ordinate the work of different departmental officers, in fact "to assist in creating a live interest in the villages". Evidently, these trained non-official workers are expected to be friend, philosopher and guide to the Panchayats in the selected area. We may possibly claim that what we have so often urged in these pages, to bring a number of Panchayats in a manageable area under the influence of a well trained non-official worker and press into co-ordinated service the valuable activities of different departments has been recognised in Mysore, an area outside our official jurisdiction, even after very good work put in through Government channels and under its control. We hope this lesson will be taken note of by the Madras Government and schemes formulated for training of men and starting of joint Committees of Panchayats to which these trained men may be attached.

---

## Sri Sathianadhan, I. C S., on Co-operative Stores.

We have elsewhere published extracts from the opening speech of Sri W. R. S. Sathianadhan, I.C.S., Registrar of Co-operative Societies, Madras, at the Conference of Co-operative Stores held at T. U. C. S. building in Triplicane on 5th June 1943. The last paragraph sets forth his faith in co-operative stores as a movement of social justice and the second paragraph sets forth how he yearns for

the success of the movement and with that burning love for it he addresses stores to learn to be pleasant to the customers—the one great characteristic to make salesmanship perfect. We congratulate the workers in the field that they have such a registrar to guide them. Even tempers may be trained with training in business methods. We should earnestly hope that the Registrar will encourage widely the training of non-official workers for these jobs, be it in short courses of a week or ten days like the one held at Mangalagiri, Tinnevelly District, sometime ago. Nothing is so conducive to success in the Co-operative field as education of workers as well as constituents on as extensive a scale as possible.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.


| Vol. 6 | ஜூலை, 1943 | No. 4 |
|---|---|---|


நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்தார்களுக்கும்.

கடந்த ஐந்து வருஷங்களுக்கு மேலாக நாம் உங்களுக்காக எங்களால் இயன்ற வரையில் பாடுபட்டிருக்கிறோம். தற்சமயம் நம் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் யுத்தமே பிரதானமாகயிருக்கிறது. ஆகையால் சாதாரண பத்திரிகைகள், மேலும் காகித பஞ்சத்தினாலும், இதா விஷயங்களைக் குறித்து எழுத சாத்தியப்படுவதில்லை. ஆகையால் ஒவ்வொரு இயக்கமும் தன் பிரத்தியேக விளம்பா சாதனங்களை சரிவர உபயோகிக்க ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நாம் பஞ்சாயத்து விஷயங்களுக்கு அதிக விளம்பாம் கொடுக்க ஆவல் கொண்டுள்ளோம். கொடுத்தும் வருகிறோம். ஆனால் பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்தார்களும், அவர்களுடைய சொந்த பத்திரிகையாகிய நம் பத்திரிகையுடன் நன்றாக ஒத்துழைத்து, பஞ்சாயத்து குறிப்புகளை விளம்பரப்படுத்தியும், பஞ்சாயத்து விவகாரங்களை கூர்மையாக கவனித்து, பஞ்சாயத்துகளுக்கு ஏற்படும் இடைஞ்சல்களைப்பற்றியும், கஷ்டங்களைப்பற்றியும் அப்போதைக்கப்போது நம் பத்திரிகையில் தெரியப்படுத்தி நன்மைபெற முன் வருவதில்லை. அவர்கள் இது விஷயமாக அசிரத்தையாக இல்லாமல், தங்கள் நடவடிக்கைகளைக் குறித்து எங்களுக்கு அடிக்கடி எழுதி, பத்திரிகையில் பிரசுரமாகும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இடம் உள்ளவரையில் கூடுமான எல்லாவற்றையும் வெளியிட தயாராக இருக்கிறோம். ஒத்துழைப்புத்தான் தேவை.

## சென்னை நீர்பாசன வசதி சட்டம்.

தற்சமயம் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியினால், கவர்மெண்டார் நம் மாகாணத்தில் நீர்பாசன வசதிகளின் சீர்படுத்துதலின் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். நம் மாகாணத்தின் ஐந்தில் ஒரு பாகம் ஜமீன்தாரி பிரதேசம். அதில் 1 கோடி, 30 லக்ஷம் ஏகராக்கள் அடங்கியுள்ளது. அநேக ஜமீன்களில் நீர்பாசன வசதிகள் பழுது பார்க்கப்படாமல் மிக கேவலமான நிலமையில் இருப்பதாக கவர்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால் பயிராகக்கூடிய அநேக நிலங்கள் பயிர் செய்யப்படாமலோ, அல்லது திருப்திகரமற்ற விளைவு தருவதாகவோ இருக்கிறது. தற்சமயம் அதிக ஆகார உற்பத்தி மிக்க அவசியமானதை யுத்தேசித்து, கவர்மெண்டார் இப்பேர்ப்பட்ட பிரதேசங்களிலெல்லாம் கூடுமான வரையில் பயிர் செய்ய வசதிகள் அளிக்க தீர்மானித்திருக்கிறார்கள். அதற்காக, ஜமீன் பிரதேசங்களிலிருக்கும் நீர்பாசன ஆதாரங்களின், பராமரிப்பு, சீர்திருத்துதல், முதலியவைகளை தாங்களே கவனிக்க சட்ட மூலம் அதிகாரம் எடுத்துக்கொள்ளப்போகிறார்கள். அதோடுகூட தனிப் பட்டவர்களுக்குச் சொந்தமான பாசன ஆதாரங்களையும் தங்கள் அதிகாரத்திற்குள் கொண்டுவர விரும்புகிறார்கள். இந்த மசோதாபடி கவர்மெண்டுக்கு தற்சமயம் இருக்கும் எல்லா தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான பாசன ஆதாரங்களை சீர்படுத்தவும், தனிப்பட்டவர்கள் நிலங்களில் புதியவைகளை கட்ட அதிகாரமும் உண்டு. இப்போது செய்யப்போகும் சட்டம் இந்த நெருக்கடியிருக்கும் காலம் வரையில் மாத்திரம் அமுலிலிருக்காது. அது நிரந்தரமாக இருக்கப்போகிறது. அப்படியிருப்பது நல்லதே. ஏனெனில் விருத்தியாகிக்கொண்டே வரும் ஜனத்தொகைக்கு தேவையான ஆகார உற்பத்திக்கு வேண்டிய வசதிகளை செய்துகொடுப்பது கவர்மெண்டாரின் கடமை. பல தடவை கவர்மெண்டார் இது விஷயமாக தாங்கள் செய்யவேண்டிய கடமையை செய்யத் தவறிவிட்டதாக பல புகார்கள் கூறப்பட்டுள்ளன. இந்த கோர யுத்தத்தின் காரணமாக, இப்போதாவது கவர்மெண்டார் ஏழை குடியானவனுக்கு நீர்பாசன வசதிகளை சீர் செய்தும், விருத்தி செய்தும் கொடுத்து உதவ முன் வந்தது சந்தோஷமானதே. இந்த மசோதா கவர்மெண்டு நீர்பாசன ஆதாரங்களிலிருந்து தனிப்பட்டவர்கள் ஆதாரங்களுக்கு தண்ணீர் செலுத்த அனுமதிகொடுத்து, அப்படி செய்வதற்கு ஒரு கட்டணம் விதிக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தைக் குறித்து கவர்மெண்டார் புனராலோசனை செய்ய வேண்டும். சென்னை ஜமீன் நில சட்டம் 30-வது செக்ஷன், 2-வது பிரிவுபடி, நீர்பாசன வசதிகள் சீர்படுத்துவதற்கும், புதிதாக கட்டுவதற்கும் ஏற்படும் செலவை ஏற்றுக்கொண்டு, அதனால் நன்மையடைந்த குடிகளிடமிருந்து அதை வசூலிக்க உரிமையுண்டு. இந்த மிக்க அவசியமான சீர்திருத்தம் செய்வதால், நிலச் சொந்தக்காரர்கள், சொந்த லாபம் அடையும்படி செய்யக்கூடாது. இந்த சட்டப்படி, கவர்மெண்டார் செய்துக்கொடுக்

கும் வசதியை குடியானவர்கள் மறுக்க முடியாது. ஆகையால், குடியான வனுக்கும் ஏற்படும் நன்மையை அனுசரிக்காமல் நிலச் சொந்தக்காரர்கள் அதிகப்படி கட்டணம் வசூலிக்கமுடியும். எவ்வளவு அதிகப்படியாக கேழ்கலாம் என்பதைக் குறித்தும் மசோதாவில் குறிப்பிடவில்லை. இந்த குறைகளால் பயிர் செய்பவனுக்கு அதிக கஷ்டங்கள் ஏற்படலாம். சீர் திருத்தம் செய்வதோ, புதிதாக கட்டுவதோ செய்யுமுன் குடியானவர்களை யும் கலந்து பிறகு ஆரம்பிக்கவேண்டும். இப்படி செய்ய கவர்மெண்டார் உத்தேசித்திருக்கலாம். அதற்கு வேண்டிய விதிகளை ஏற்படுத்த தீர் மானித்திருக்கலாம். ஆனால் இது குடியானவர்களுக்கு அதி முக்கியமான தால், இதைக் குறித்து சட்டத்திலேயே தெளிவாக குறிப்பிடுவது நல்லது. எவ்வளவு அதிகப்படி கட்டணம் வசூல் செய்யலாம் என்பதைப்பற்றியும் மிகவும் நன்றாக தெளிவுபடுத்த வேண்டும். வாஸ்தவத்தில் இந்த வேலை களை யெல்லாம், நிலச் சொந்தக்காரர்கள், கவர்மெண்டார் அவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை யுத்தேசித்து, வெகு காலத்திற்கு முன்ன மேயே செய்திருக்க வேண்டும். இது அசட்டை செய்யப்பட்டது. அந்தக் கடமையை இப்போது கவர்மெண்டார் செய்யும்படி செய்தால், அதற்காக அவர்கள் யாதொரு லாபத்தையும் எதிர்பார்க்க லாயக்கில்லை. ஆயினும், தாங்கள் செலவு செய்த தொகைக்கு பிரதி லாபம் எதிர்பார்ப்பது நியாயம் என்றதால், அவர்களுக்கு கவர்மெண்டார் தங்கள் ஆதீனத்திற்குட்பட்ட இடங்களில் செய்தவைகளிலிருந்து எவ்வளவு கிடைக்கிறதோ, அதற்கு மேல் போகாமல் செய்யவேண்டும். உதாரணமாக கடப்பை, கர்நூல் கால்வாயினால் வருஷத்திற்கு 100-க்கு $\frac{3}{4}$ ரூபாய்தான் கிடைக்கிறது. அதே மாதிரி ஒரு வேலை நிலச் சொந்தக்காரர்களுக்கு ஏன் அதைவிட அதிகம் கொடுக்கவேண்டும். கவர்மெண்டாருக்கு குடியானவன் நன்மை விஷய மாக எவ்வளவு கடமை யிருக்கிறதோ, அதேபோல் நிலச் சொந்தக்காரர் களுக்கும், குடிகளுக்கு நீர்பாசன ஆதாரங்கள் சீர்படுத்திக்கொடுப்பது கடமை. அதிலிருந்து கிடைக்கும் லாபத்தை எதிர்பார்க்கக்கூடாது. ஆகையால் மசோதா கடைசியாக உருவாகு முன் கவர்மெண்டார் இது விஷயத்தைக் குறித்து தீர்மானிப்பது நல்லது.

---

## மைசூரில் கிராம புனருத்தாரண வேலை.

சமீப காலமாக மைசூர் சமஸ்தானத்தில் கிராம அபிவிருத்தி விஷய மாக, அடுத்திருக்கும் பிரிட்டிஷ் பிரதேசத்தைக்காட்டிலும், அதிக உன்னத நிலைமை யடைந்திருக்கிறது. 1898-ல் மைசூரில் கிராம சுகாதார சட் டம் ஏற்பட்டது. 1926-ல் பஞ்சாயத்து சட்டம் உண்டாயிற்று. அதா வது சென்னை சட்டத்தைவிட 6 வருஷம் கழித்து—ஆனால் மைசூரில் பஞ் சாயத்துகள் நிர்பந்தமாக ஏற்படுத்தப்பட்டன. இப்போது மைசூரில் பஞ்சாயத்தில்லாத கிராமமே கிடையாது.

மேலும், மைசூரில் கிராமங்களை சீர்திருத்த, அங்குள்ள ஆள் பலத்தை பூரணமாக உபயோகித்தார்கள். ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒவ்வொரு

வீட்டிலிருந்து ஒரு ஆள் அனுப்பி பள்ளங்களை மூடுதல், புதர்களை வெட்டி அப்புரப்படுத்துதல், பெரிய ரஸ்தாக்களுடன் சேரும்படி கிராம ரஸ்தாக்களை சீர்படுத்துதல், மரம், செடி வளர்த்தல் முதலிய ஊழியங்கள் நிர்பந்தமாக செய்யப்படவேண்டும். இதை சோமவரத கிலாசம் என்று சொல்லுகிறார்கள். இதனால் கிராமவாசிகளுக்கு பல நன்மைகள் ஏற்பட்டிருப்பதுடன் கிராமங்களில் ஒருவிதமான, மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் அழகு எங்கும் தென்படுகிறது. மேலும், கிராம பிரதேசங்களுக்கு மின்சாரம் பரவி மேலும் அழகு படுத்தியிருக்கிறது. ஆனால் மைசூர் கவர்மெண்டார் இத்துடன் திருப்தியடைந்துவிடவில்லை. இது வரையில் செய்ததெல்லாம் கவர்மெண்டு மாரிபத்தாக செய்யப்பட்டதாகையால், எதிர்பார்த்த பூரா நன்மைகளும் கிடைக்கக்கூடவில்லை. 1936-ல் ஒரு ஐந்து வருடதிட்டம் தயார் செய்யப்பட்டது. அந்த ஐந்து வருஷங்களில் 264 கிராமங்களில் தான் வேலை செய்ய முடிந்தது. ஆகையால் அரசாங்கத்தார் மற்றொரு ஐந்து வருஷ திட்டம் தயார் செய்திருக்கிறார்கள். கவர்மெண்டு உத்தியோகஸ்தர்கள் மட்டுமின்றி இதர ஊழியர்களும் இந்த வேலைக்கு பயிற்சி செய்யப்படுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு தாலுகாவின் சில பாகங்கள் மட்டுமே இவர்கள் வசம் ஒப்புவிக்கப்படும். இப்படி ஐந்து வருஷங்களில் எல்லா பிரதேசங்களிலும் ஏற்பாடு பூர்த்தியாகும். இந்த கவர்மெண்டு பற்றற்ற ஊழியர்கள், பல இலாகா உத்தியோகஸ்தர்களின் வேலைகளை தாங்கள் ஒன்றுகூடி கவனித்து கிராம முன்னேற்றத்தில் ஊக்கத்தை வளரச் செய்ய உதவுவார்கள் என்று தெரியப்படுகிறது. இந்த உத்தியோகப் பற்றற்ற ஊழியர்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட பிரதேசங்களில் பஞ்சாயத்துகளுக்கு ஆலோசனையாளர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் இத்தனை காலமாக வற்புறுத்திவந்தபடி, அதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள எல்லா பஞ்சாயத்துகளையும் ஒரு பயிற்சி பெற்ற ஊழியர் வசம் ஒப்படைத்து, கிராம சம்பந்தப்பட்ட எல்லா இலாகா உத்தியோகஸ்தர்களின் வேலைகளை பயன்படும்படி ஒன்றுகூட்டி நடத்தவேண்டும்—என்பது, மைசூர் சமஸ்தானத்தில் கவர்மெண்டார் செய்த முயற்சிகளுக்கு பின்னிட்டும், அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த முறையை நம் சென்னை கவர்மெண்டாரும் அனுசரித்து, ஊழியர்களுக்கு பயிற்சியளித்து, கூட்டு கமிடிகள் ஏற்படுத்தி, இந்த ஊழியர்களிடம் ஒப்படைக்க திட்டம் தயார் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

---

## கோவாபரேடிவ் ஸ்டோர்களைப்பற்றி ஸ்ரீ சத்தியநாதன் ஐ. சி எஸ்.

5-6-1943 இல் சென்னை திருவல்லிக்கேணி T. U. C. S. கட்டடத்தில் நடந்த கோவாபரேடிவ் ஸ்டோர்கள் மகாநாட்டை திறந்து வைக்கையில் ஸ்ரீ W. R. S. சத்தியநாதன் அவர்கள், கோவாபரேடிவ் சொசைடி ரிஜிஸ்த்ரார், செய்த பிரசங்கத்தின் சில பகுதிகளை இந்த இதழில் வேறொரு

இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அவர் பிரசங்கத்தின் கடைசி பாகம் கோவாபரேடிவ் ஸ்டோர்கள் எப்படி சமூக நியாயத்தை ஸ்தாபிக்க இயக்கமாகிறது என்கிற தன் நம்பிக்கையையும், இரண்டாவது பாகம்தான் எப்படி அந்த இயக்கத்தின் வெற்றியை ஆவலுடன் விரும்புகிறார் என்பதையும் தெளிவுபட காட்டுகிறது. தனக்கிருக்கும் தீவிர விருப்பத்தினால், அவர் ஸ்டோர்கள் வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால் மிகவும் இன்றியமையாததான சரியான விற்பனை முறைகளைப் பற்றியும், எப்படி வாடிக்கைகாரர்களிடம் நயமாக நடந்துக் கொண்டு அவர்களை வசப்படுத்த வேண்டும் என்பதைப்பற்றியும் விளக்கியிருக்கிறார். இப்படி உத்சாகம் மிகுந்த உத்தியோகஸ்தர் தங்களுக்கு வழிகாட்ட வாய்த்திருப்பதைக் குறித்து அந்த ஊழியர்களை வாழ்த்துகிறோம். முன் கோபமுள்ளவர்கள் கூட வியாபார முறைகளில் பயிற்சியடைந்தால், சரியாகி விடுவார்கள். உத்தியோக பற்றற்ற ஊழியர்களை இந்த சேவை செய்ய எவ்வளவு கொஞ்சகால பயிற்சியானாலும், திருநெல்வேலி ஜில்லா மங்களகிரியில் கொஞ்சநாட்களுக்கு முன் நடந்தது போல் ஒரு வாரம், 10 நாள் பயிற்சியானாலும் சரி, அதிகமாக பொறுக்கி யெடுப்பார் என நம்புகிறோம். கோவாபரேடிவ் இயக்கத்தில் ஊழியர்களுக்கும் ஜனங்களுக்கும் அதிகமாக பிரசாரம் செய்து பயிற்சி யளிப்பதால் ஏற்படும் நன்மையைப்போல் வேறு ஒன்றும் ஏற்படாது.

# கால் நடைகளுக்கு கொம்பெடுத்து விடுவது.

---

பசுக்களை பால் கறக்க ஒரு மந்தையாக கட்டி வைத்தால், அவைகளின் கொம்புகளை எடுத்து விடவேண்டியது அவசியமாகிறது. மாட்டுக்கொட்டில்களில் கூட்டமாக இருக்கும்போது சாது பசுக்களை சில முரட்டு மாடுகள் முட்டிவிடுகின்றன. இப்படி அடிக்கடி செய்தால், பசுக்கள் பால் கொடுப்பது குறைவு படுகிறது. சில சமயம், பலமாக முட்டுவதால், பால் மடிக்கு அதிக காயம் ஏற்படுகிறது. மாட்டுக் கொட்டில்களில் கொம்புள்ள பசுக்களை அதிகமாக கட்டி வைக்க முடிவதில்லை. முரட்டு எருதுகளின் கொம்புகளை எடுத்து விட்டால், அவைகளை அடக்குவது மிகவும் சுலபமாகி விடுகிறது. இது தவிர, இதர அனுகூலங்களும் உண்டு. அவைகளை யெல்லாம் இங்கு விவரிக்க தேவையில்லை.

ஆகையால் கால் நடைகளின் கொம்பை எடுத்து விடுவது நல்லது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். வயது வந்த மாடுகளின் கொம்புகளை எடுக்கும் போது அதிக நோவு கொஞ்ச நேரம் ஏற்படுகிறது. சில இடங்களில் செய்வது போல், கொம்புகளை ரம்பம்வைத்து அறுப்பது காட்டு மிராண்டித்தனமானது. அப்படி செய்யவே கூடாது. அதிக கூர்மையான பெரிய கருவிகளை உபயோகித்தால், கொம்பு எடுக்கும்போது ஒரு க்ஷணமாத்திரமே நோவு உண்டாகும். புண்பட்ட மடியுடன் கூடிய பசுவை கரப்பதினால் ஏற்படும் நோவைவிட மிகக் குறைவானதே.

அதை செய்ய தேவையான கருவிகளைப்பற்றியும், செய்ய வேண்டிய முறையைப்பற்றியும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கொம்பெடுக்கும் போது 20 நிமிஷத்திற்கு ரத்தம் வரலாம். பிறகு ரத்தம் கட்டி, நின்றுவிடும். காயம் ஆறிவிடும். 20 நிமிஷத்திற்குமேல் ரத்தம் விடாமல் வெளிப்பட்டால் சிகித்ஸை தேவையாக யிருக்கும். சாதாரணமாக, ஜாக்கிரதையாக செய்தால், இப்படி நேரிடாது. மூன்று வயதுக்குள், கொம்பானது சதையாக இருக்கும். எலும்புடன் சேர்ந்திராது.

ஆகையால் அந்த சமயத்தில் கொம்பெடுப்பது தான் மிகவும் சுலபம். அபாயகரமற்றது. வயது வந்த கால் நடைகளின் கொம்பெடுப்பதால் அனுகூலங்கள் உண்டு. ஆகையால்தான் அது செய்யப்படுகிறது. ஆனால் சிறிய கன்றாக இருக்கும் போதே கொம்பை எடுக்கும் வழக்கம் இப்போது அதிகமாகிக்கொண்டு வருகிறது. இதுதான் மிக்க சிறந்த முறை. சாதாரணமாக கன்று போட்ட ஒன்று முதல் ஐந்து நாட்களுக்குள் செய்வது மிகவும் உத்தமம். 10 நாளைக்குள்ளாகவாவது செய்வது மேன்மையானது.

அது எப்படி செய்யப்படவேண்டும் என்றால், கொம்பு முளையிலிருந்து எல்லா மயிரையும் ½ அங்குல வட்டமாக எடுத்து விட்டு, அதைச் சுற்றிலும் மெழுக்கு நன்றாக தடவவேண்டும். ஆனால் கொம்பு முளையில் அது போகும்படி தடவக் கூடாது. காஸ்டிக் சோடா (Caustic Soda) வாவது பொடாஷாவது (Potash) ஒரு குச்சியில் எடுத்து நனைத்து, கொம்பு முளையின்மேல் அழுத்தமாக தேய்க்க வேண்டும். அந்த குச்சியை காகிதத்தில் சுற்றி யிருக்கவேண்டும், அல்லது ஒரு பிடியில் வைக்கவேண்டும். அப்படி சுமார் ஒரு நிமிஷம் தேய்க்கவேண்டும். கொஞ்ச நேரம் ஆனதும், சதை பிரிந்து, ஒரு விதமான ஈரமான வஸ்து வருகிறது. எவ்வளவு நேரம் தேய்க்கவேண்டும் என்பதை பழக்கத்தினால் அறியலாம். அந்த கன்றை பிறகு மேல்பார்வையில் வைத்திருக்கவேண்டும். மறுபடி கொம்பு முளைக்கும்போல் அடையாளங்கள் தெரிந்தால், உடனே காஸ்டிக் சோடாவை போட்டு தேய்த்தால், மொட்டையாகிவிடும். அரைகுறையாக செய்தால், பின்பு கொம்பு கோணல்மாணலாக முளைக்கும்.

# 5-6-1943 திருவல்லிக்கேணியில் ஸ்ரீ சத்தியநாதன் அவர்கள் ஐ.சி.எஸ். செய்த பிரசங்கத்திலிருந்து சில பகுதிகள்.

---

இந்த யுத்தம் கோவாபரேடிவ் ஸ்டோர்களின் வளர்ச்சிக்கு மிகவும் காரணமாக இருக்கிறது. 1938-39 முதல் ஸ்டோர்கள் ஸ்தாபிக்கும்படி பொது ஜனங்களிடமிருந்து வற்புறுத்தல் மிகவும் மிகவும் அதிகரித்து வருகிறது. அநேகமாக ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. 30-6-1936-ல் கோவாபரேடிவ் ஸ்டோர்கள் எண்ணிக்கை 73 ஆக இருந்து 15-12 42 இல் 625 யாகி 30-4-43 இல் 844 ஸ்டோர் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1937-38 இல் சுமார் 22 லக்ஷம் ரூபாய் பொறுமான சாமான்கள் விற்பனையாகின; 1941-42 இல் 100.20 லக்ஷ ரூபாய்க்கு சாமான்கள் விற்பனையாகிற்று. 30-6-43 யுடன் முடிவடையும் இவ்வருஷம் இரண்டு கோடி ரூபாய்க்கு சாமான்கள் விற்பனையாகியிருக்கும்.

நம் மாகாணத்தில் கோவாபரேடிவ் ஸ்டோர்கள் விருத்தியடைந்ததில், ஜில்லா மத்திய மொத்த கோவாபரேடிவ் ஸ்டோர்கள் ஸ்தாபிக்கப்பட்டதை குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் பல கிளை ஸ்டோர்கள் ஸ்தாபிக்கபட்டதால், மத்திய ஸ்தாபனங்களுக்கு அவசியம் ஏற்பட்டது. உற்பத்தியாகும் இடங்களிலிருந்து சரசமான விலைக்கு சாமான்களை மொத்தமாக வாங்கி விற்பனை செய்தாலன்றி, தனிப்பட்ட ஸ்டோர்கள் அதிக நன்மை தரக்கூடிய அளவுக்கு நடத்தமுடியாது என்றும், முக்கிய கிளை ஸ்டோர்கள் ஒன்று சேர்ந்து கோவாபரேடிவ் மத்திய ஸ்டோர்களாக அமைந்து, தங்கள் அதிக திரவிய பலத்தாலும், சீரான முறையில் நடத்தப்படுவதாலும், வியாபார அனுபவத்தாலும், உற்பத்தி ஸ்தலங்களிலிருந்து அந்தந்த காலங்களில் கிடைக்கும் சாமான்களை மொத்தமாக வாங்கி நியாயமான விலைக்கு கிளை ஸ்தாபனங்களுக்கு கொடுத்து வந்தால் அனுகூலமாக யிருக்கும் என்று தெரிய வந்தது. மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள கிளை ஸ்டோர்கள் 1940 வருஷம் பிப்ரவரி மாதம் மதுரை ராமநாதபுரம் மொத்த வியாபார ஸ்டோராக பிணைக்கப்பட்டது. இதே மாதிரி இதர ஜில்லாக்களும் செய்தன. இப்போது நம் மாகாணம் பூராவும் 21 கோவாபரேடிவ் மொத்த வியாபார ஸ்டோர்கள் இருக்கின்றன.

சமீபத்தில் கவர்மெண்டார் ஸ்டோர்கள் மூலம் வெளியூர்களில் முக்கியமான சாமான்களை வாங்கி, சேகரித்து, விநியோகம் செய்ய ஒரு அவசரதிட்டம் தயார் செய்திருப்பது உங்களுக்கு தெரியும். அதனுடைய முக்கிய நோக்கங்கள் என்னவென்றால், தனிப்பட்ட வியாபாரிகளின் கொள்ளை லாபத்தை தடுக்கவும், முக்கியமான சாமான்களின் விலைகளை அதிகரிக்க வொட்டாமல் நியாயமான அளவுக்கு நிறுத்தவும், நெருக்கடி ஏற்பட்டால் ஆகார சாமான்கள் அகப்படுவதின் கஷ்டத்தை தவிர்க்கவும் உத்தேசித்து செய்யப்பட்டது. முதலில் இந்த திட்டம் 34 நகரங்களில் 14 கோவாபரேடிவ் மொத்த வியாபார சங்கங்கள், 65 சில்லரை ஸ்டோர்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடந்தால், இதர இடங்களிலும் நடத்தப்படும்.

ஸ்டோர் சங்கங்களை மேல் பார்வை பார்க்க, கவர்மெண்டார், பிரத்தியேக சிப்பந்திகளை நியமித்திருக்கிறார்கள். காரியதரிசிகளும், மானேஜர்களும் நியமித்தும், சில்லரை ஸ்டோர்களின் ஒரு ஐக்கிய கூட்டத்தை மேல் பார்வை செய்யவும் சிப்பந்திகள் நியமித்திருக்கிறார்கள். இந்த திட்டம்படி சாமான்கள் வாங்கி சேக

ரித்து வைக்க தேவையான பணம் ஜில்லா மத்திய பாங்கிகள் கொடுக்கின்றன. இந்த கடன்கள் திருப்பிக்கொடுக்க கவர்மெண்டார் ஜாமீன் இருக்க சம்மதித்திருக்கிறார்கள். இந்த திட்டம் சென்ற ஏப்ரல் மாதம்தான் அமுலுக்கு வந்தது. சில ஸ்டோர்களுக்கு இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது எனக்கு தெரியும். ஆனால் கலெக்டர்கள் உதவிகொண்டும், உங்கள் அனுபவம் கொண்டும் இந்த சங்கடங்களை நீங்கள் சமாளிப்பீர்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது. அநேக ஸ்டோர்கள் அந்தஸ்துள்ள உத்தியோக பற்றற்றவர்களால் நடத்தப்படுகிறது.

ஸ்டோர் சங்கங்கள், கோவாபரேடிவ் ஸ்தாபனங்களானாலும், வியாபாரம் செய்யும் ஸ்தாபனங்கள் என்றும், அவைகளை நடத்துவதில் லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்தை போக்கி மேன்மையான வர்த்தக முறைகளை கையாளவேண்டும் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அநேக ஸ்டோர் சங்கங்கள் வேலை செய்வதையும், அநேக ஜனங்கள் அங்கு ஆவலுடன் சாமான்கள் வாங்க வருவதையும் நான் நேராக பார்த்திருக்கிறேன். ஆனால் சில இடங்களில் ஜனக்கூட்டத்தை சமாளிக்கமுடியாமல் இடம் நெருக்கடியாக இருக்கிறது. ஒரு சிறிய இடத்தில் கூட்டம் பல அசௌகர்யங்களுடன் நிற்கவேண்டியிருக்கிறது. உள்ளே வருகிறவர்களுக்கும், வெளியே போகிறவர்களுக்கும் தனித் தனியாக வேறு இடம் இல்லை. மேலும் வருபவர்கள் சாமான்கள் வாங்க ரொம்ப அதிக நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இந்த குறைகளெல்லாம் இருந்தால், நம் இயக்கம் தடைபடும். ஒவ்வொரு ஸ்டோரும் நல்ல வர்த்தக முறையை கற்றுக்கொள்ள வேண்டும். வாடிக்கைகாரர்களை திருப்தி செய்தால் தான் வியாபாரம் விருத்தியடையும். ஒவ்வொரு வாடிக்கைகாரரையும் திருப்தி செய்து, அடிக்கடி வந்து நம் ஸ்டோர்களிலேயே சாமான்கள் வாங்க அவர்களுக்கு தூண்டுதல் உண்டாகும்படி செய்ய எல்லா ஸ்டோர்களும் முயல வேண்டும்.

கோவாபரேடிவ் ஸ்டோர்கள் ஆகாரப்பொருள்கள் மாத்திரம் விற்பனை செய்ய வேண்டுமென்பதில்லை. அவைகள் துணி விற்பனையையும் லாபகரமாக நடத்தலாம். டி. யு. சி. எஸ். மற்றும் சில ஸ்டோர்கள் இப்படி செய்கின்றன. பல நெசவாளர் சங்கங்களை ஸ்டோர்களுடன் இணைத்து நடத்தினால் நெசவாளர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் நன்மையுண்டாகும்.

மாகாண கைத்தறி நெசவாளர் சங்கம் சமீபத்தில் தன் நடவடிக்கைகளை அதிகப்படுத்திருப்பது உங்களுக்கு தெரிந்திருக்கலாம். மாமூலாக தயார் செய்யப்பட்டு துணிகளை உற்பத்தி செய்வதுடன், கைத்தறி மலிவு துணி, என்ற புதிய தினுசு துணி கொஞ்ச காலம் அதிகமாக உற்பத்தி செய்யப்படப்போகிறது. இவைகளை தற்போதிருக்கும் விலைகளைவிட குறைவான விலைகளுக்கு விற்கப் போகிறார்கள். எல்லா கோவாபரேடிவ் ஸ்தாபனங்களையும் இந்த துணி தினுசுகளை விற்பனை செய்யும்படி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அப்படி அவையெல்லாம் உத்சாகத்துடன் செய்யும் என்று நம்புகிறேன்.

சென்ற 3, 4, வருஷங்களில் ஏற்பட்டிருக்கும் வாங்குபவர்கள் சங்கங்களின் அபரிமிதமான வளர்ச்சியானது அவைகள் லக்ஷியமான சமூக நியாயத்தில் ஜனங்களுக்குண்டாகும் ஒரு புத்துணர்ச்சியை காட்டுகிறது. அது பொருளாதார விஷயங்களில் தற்காப்புசெய்து, தனிப்பட்டவர்கள் லாபம் கொள்ளும் நோக்கத்துடன் சாமான் விற்பனை செய்யும் அநீதியை ஜனங்கள் வெறுப்பதை பிரதிபலித்துக்காட்டுகிறது.

# செய்திகளும், குறிப்புகளும்.

---

## கைகுத்தல் அரிசிதான் காப்பாற்றும்.

இந்த வருஷ முதலில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நெல்லை மில்களில் குத்துவது தடுக்கப்பட்டு, கைகுத்தல் அரிசிதான் உபயோகப்படுத்த வேண்டும் என்று உத்திரவு போடப்பட்டது. இதனால் ஜனங்களுக்கு சத்துள்ள பாகம் காப்பாற்றப்பட்டதுடன், மில்களில் அரிசி சேதமாவதும் மிச்சப்படுத்தப்பட்டது. அரிசி பஞ்சமாக இருக்கும் இந்த காலத்தில் அரிசி சேதத்தை குறைக்க சென்னை கவர்மெண்டார் அரிசி மில் கட்டுப்பாடு உத்திரவு ஒன்று போட்டார்கள். இது அரிசி அதிகமாக தீட்டப்படுவதை தடுக்க ஏற்பட்டது. மேலும் 221 விவசாய தாலூகா டிபோக்களில் ஜனங்களுக்கு செய்து காண்பிப்பதற்காக மர நெல் குத்திகள் ஒன்று 6 ரூபாய் செலவில் கொடுக்க 1,500 ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இது சரியே. ஆனால் அரிசி மட்டமாக தீட்டப்பட்டதா, அதிகமாக தீட்டப்பட்டதா என்பதை கண்டுபிடிக்க பரிசைஷ சாலைகளில் நுட்பமாக பரிசைஷ செய்து பார்க்கவேண்டியிருக்கிறது. இது சுலபமல்ல. அதைவிட மில் குத்தலே கூடாது என்று திருவாங்கூர் கவர்மெண்டாரைப் போல் தடுத்துவிடுவது நல்லது. அந்த சமஸ்தானத்தின் அனுபவத்திலிருந்து சென்னை கவர்மெண்டாரும் பயனடையலாம்.

* * *

## தக்காளி விதை.

செடியில் தக்காளி நன்றாக பழுக்கவேண்டும். பின்பு அந்த பழங்களை பறித்து, தண்ணீரில்லாத மரத்தொட்டியிலாவது, மண்தொட்டியிலாவது அதை ஒன்று, இரண்டு நாட்கள் நசுக்கவேண்டும். அடிக்கடி கிளரவேண்டும். சதை நுரைத்து, விதைகள் அடியில் தங்கும். அந்த நுரை சதையை வெளியில் எரிந்து விதைகளை எடுத்து, கழுவி, ஒரு பலகையில் பரப்பி, நிழலில் வைத்து உலர்த்தவும். நடு நடுவே கிளரவும்.

* * *

## கத்தரி விதை.

இவைகளும் மேலே சொன்ன தக்காளி விதையைப் போலவே செய்யவும். ஆனால் பெரிய கினுசுகாய்களிலுள்ள சதையை அதிகமாக எடுத்துவிட்டு, மேல் தோலை நீக்கிவிடவேண்டும்.

* * *

## தண்ணீர் கலந்த பால்.

நவீன முறைகளால் பாலில் 1 சத விகிதம் தண்ணீர் கலந்தாலும் கண்டு பிடிக்கலாம். சட்டப்படி பாலில் கொஞ்சம் தண்ணீர் கூட கலக்கக்கூடாது. பால் விற்பவர்கள் ஒரு குறித்த அளவு வரையில் பாலில் தண்ணீர் கலக்கலாம் என்ற அபிப்பிராயம் சிலருக்கு இருக்கிறது. இது தப்பு. இதைக் குறித்து ஒரு ஹைகோர்டு தீர்மானம் இருக்கிறது.

**தேனீக்களும், யுத்தமும்.**

சர்க்கரைக்கு பதில் தேன் தேவையாக இருப்பதுடன், தேனீ மெழுக்கு மிகவும் முக்கியமாக தேவையாக யிருக்கிறது. அது அதிகம் உற்பத்தி செய்தால் யுத்த முயற்சிக்கு சகாயம் செய்யலாம்.

* * *

சிறிய கப்பல்கள், ஆகாய விமான பாரசூட்டுகள் (Parachutes), வெடிமருந்து கள், இன்னும் பல அவசியமான சாதனங்கள் செய்ய தேனீ மெழுக்கு உபயோகப் படுகிறது. 1941 இது 320,000 பவுண்டு கிடைத்தது. ஆனல் இவ்வருஷம யுத்த முயற்சிக்கே 500,000 பவுண்டு தேவையாக இருக்கிறது. 1943 இல் 750,000 பவுண்டு தேவையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

* * *

**நாம் எவ்வளவு ஆகாரப் பொருள் உற்பத்தி செய்கிறோம்.**

நம் தேசத்தில் வருஷத்தில் 5½ கோடி டன்கள் ஆகாரப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

---

# மதருஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனு பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடெரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியன்னு, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைத்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதாரர்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்**, எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.